# ஒரு வரம் நான் கேட்கின்றேன்

ஒருவரம் நான் கேட்கின்றேன் திருப்பதம் நான் பணிகின்றேன்
மனிதனாக முழு மனிதனாக வாழும் வரம் தான் கேட்கின்றேன் -2

**1**
நிறைவுண்டு என்னில் குறையுண்டு நிலவின் ஒளியிலும் இருளுண்டு (2)
புகழுண்டு என்றும் இகழ்வுண்டு இமய உயர்விலும் தாழ்வுண்டு (2)
மாற்ற இயல்வதை மாற்றவும்   அதற்கு மேல் அதை ஏற்கவும்
உனது அருள் தந்து எனது நிலை நின்று வாழ வரம் தருவாய்

**2**
உறவுண்டு அதில் உயர்வுண்டு இணைந்த தோள்களில் உரமுண்டு (2)
இல்லமுண்டு சுற்றம் நட்புமுண்டு இதழ்கள் இணைந்தால் மலருண்டு (2)
மகிழ்வாரோடு நான் மகிழவும் வருந்துவோருடன் வருந்தவும்
உனது அருள் தந்து மனித நிலை நின்று வாழ வரம் தருவாய்